Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆடு ஐப்பசி மீ 27 உ செவ்வாய்க்கிழமை (13-11-1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 24 ஓசை 259

## உணவு முத்திரைத் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த உணவு முத்திரைத் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரும் தீர்மானம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற அதிகாரிகளுக்கிடையிலான கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

இதன்படி இன்று தொடக்கம் ஆறாவது புள்ளி வரைக்கும் உணவுப் பொருள்களை (4-ம் பக். பார்.)

# சமூகத்திற்குப் பயன்படும் கல்வியே எமக்கு தேவை

## புதிய கல்விக் கொள்கைபற்றி யோகி வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்துடன் பங்களிப்புச் செய்யக்கூடியதும் எமது மக்களுடன் இணைந்து செல்லக்கூடியதும் எமது இன்பதுன்பங்களுடன் பங்கிளிக்கக்கூடிய ஒரு கல்வித்திட்டமே எமது வருங்கால சமுதாயத்தை வளர்த்தெடுக்கக் கூடியதாகும்.

இவ்வாறு நேற்றுக் காலை யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோகரத்தினம் யோகி உரையாற்றினார்.

காலை பத்துமணியளவில் கூட்டம் ஆரம்பமானதுமே ஏராளமான மாணவர்கள் கைலாசபதி அரங்கத்தினுள் கூடிவிட்டனர். மாணவர்களினால் அரங்கம் நிரம்பி வழிந்தது. கூட்டம் ஆரம்பமானதும் மேலும் மாணவர்களும், விரிவுரையாளர்களும் வந்து சேர்ந்ததால் அரங்கத்தின் வெளியேயும் ஏராளமானோர் குழுமி நின்றனர்.

இந்தக் கூட்டத்தில் யோகி மேலும் கூறியதாவது: எமது மாணவர்களுக்கு தற்போது புகட்டப்படும் கல்வி இந்த மண்ணிற்கு எந்த வகையிலும் பயன்படக் கூடியதல்ல, நாம் இப்பொழுது கற்கும் கல்வி எமதுமண் இந்த மண்ணின் உணர்வுகள் என்பனவற்றோடு முற்றிலும் முரண்பட்டனவாகவே உள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் காலை இழந்தார்

(அம்பாறை)

விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் கால் ஒன்றை இழந்தார்.

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள மாந்தோட்டப் பகுதியிலேயே புலிகளின் மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் தமது கால் ஒன்றை இழந்துள்ளார். (மு)

## கிருஷ்ணானந்தன் நினைவாக புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

பொருளியல் அறிஞர் அமரர் திரு. கிருஷ்ணானந்தன் அவர்களின் நினைவாக புலமைப் பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத் திட்டம் மாணவர்களை கல்வியில் ஆர்வத்துடன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டச் சூழலில் இருந்து பிரிந்து வாழ முடியாது — மாலினி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் உள்ள ஒவ்வொரு மாணவர்களும் விடுதலைப் போராட்டசூழலில் இருந்து பிரிந்துவாழ முடியாது என்ற யதார்த்த சூழ்நிலையை புரிந்துகொண்டு இந்தப் போராட்டத்துக்கு ஒவ்வொரு மாணவர்களும் பணியாற்ற வேண்டும் என நேற்று கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்ற மாணவர்கள், விரிவுரையாளர்கள் பங்குபற்றிய மிகப்பெரும் கூட்டத்தில் யாழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் க.பொ.த. சா. முடிவுகள்வந்தன

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்கு தனிப்பட்ட முறையில் தோற்றிய மாணவர்களுக்கான பெறுபேறுகளை பலசிரமத்தின் மத்தியில் யாழ். கல்வித் திணைக்களம் வரவழைத்துள்ளது.

இவை அனைத்தும் இன்னும் சில தினங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும், இடம் பெயர்ந்த மாணவர்கள் தங்களுக்கு அண்மையில் உள்ள கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நெல்லியடியில் தமிழீழ எழுச்சி விழா

(நெல்லியடி)

யாழ். முறைசாராக் கல்விப் பிரிவின் வடமராட்சி முதலுதவி நிலையங்களின் ஆதரவுடன் ''தமிழீழ எழுச்சிவிழா'' வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவில் நடைபெறவுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாகாமம் ராணுவமுகாம்மீது "கால்கஸ்ரோ" தாக்குதல்

(அம்பாறை)

சாகாமம் இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ''கால்கஸ்ரோ'' தாக்குதலாலும், துப்பாக்கித் தாக்குதலாலும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சாகாமம் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. இந்தத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் கால்கஸ்ரோ ஷெல் தாக்கு

(4ஆம் பக்சம் பார்க்க)

## ராஜீவ் பேச்சு பாட்டனாரையும், தாயாரையும் இழிவு படுத்துகின்றது — கருணாநிதி

(சென்னை)

தமிழ்நாடு புலிகளின் செல்வாக்கில் உள்ளது என்று பாராளுமன்றத்தில் திரு. ராஜீவ்காந்தி தெரிவித்த கருத்து எவ்வித ஆதாரமுமற்றது எனத் தமிழக முதல்வர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

யாரரையோ திருப்திப்படுத்துவதற்காக இவ்வாறு பேசுவது முன்னாள் பிரதமருக்கு சிறிதேனும் பொருத்தமான செயல் அல்ல எனத் தெரிவித்த திரு. மு. கருணாநிதி திரு. ராஜீவ்காந்தியின் கருத்து அப்பட்டமான பொய் என வர்ணித்துள்ளார். முன்னாள் பிரதமர்களான அவரது தாயாரினதும், பாட்டனார் நேருவினதும் கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் திரு ராஜீவ் காந்தி இவ்வாறு பேசியுள்ளார் என திரு. கருணாநிதி கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வாங்க கோடிக்கணக்கான ரூபாய்களை வழங்கினார் என்பதையும், தமிழ் நாட்டிலுள்ள முகாம்களில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்துறையில் மோதல்; இராணுவம் முகாம் திரும்பியது

(மன்னார்)

முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் எதிர்த் தாக்குதலால் பெரும் இழப்புகளுடன் பின்வாங்கினர்.

நேற்று முன்தினம் காலை 6-30 மணியளவில் மன்னார் சிலாவத்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலால் இராணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அநீதி இழைக்கப்பட்டவர்கள் மேன் முறையீடு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

அதிபர் தரம் 1, 2 க்கான எழுத்து மூலம் தேர்வுப் பரீட்சையில் சித்திபெற்று, நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பட்டும் தெரிவு செய்யப் படாதவர்கள். தமக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றிக் கல்விச் சேவை ஆணைக் குழு

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாமதம் ஏற்பட்டமைக்கு உத்தரவின்மையே காரணம்

(மானிப்பாய்)

நவாலி இடிகுண்டடியில் புதிய உபமின் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக வலி தென்மேற்கு பிரதேசசபை உப அலுவலகத்திற்கு (மானிப்பாய் கிராமம்) மாவட்ட அபிவிருத்திச் சபையில் 2,50,000 ரூபா கடந்த 89ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட போதும் இதுவரை அதனை அமைப்பதற்கு இலங்கை மின்சார சபையிடமிருந்து உத்தரவு கிடைக்கவில்லை.

அதேவேளை இன்று பொருள்களின் விலையேற்றம் காரணமாக அந்த நிலையத்தை அமைக்க இன்னும் ஒருலட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் இதனை உள்ளூராட்சி உதவி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணியந்தோட்டப் பகுதியில் நேற்று அதிகாலை விமானக் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம், குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்கா விமானப்படையினர் குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை மணியந்தோட்டம் வான்பகுதிக்குள் பிரவேசித்த மூன்று குண்டு வீச்சு விமானங்கள், ஒரு அவ்ரோ விமானம், ஹெலிகொப்டர் ஒன்று ஆகியவை இணைந்து குண்டுத் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலில் உதயபுரம் கொழும்புத்துறையைச் சேர்ந்த றெஜினா (வயது 13) என்பவர் உட்பட வேறு இருவரும் காயம் அடைந்தனர். மூன்று பொதுமக்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. இப்பகுதியில் இருந்த இருபதிற்கும் மேற்பட்ட தென்னைமரங்கள் முறிவடைந்த நிலையில் காணப்பட்டன. அவ்ரோ வீசிய பீப்பாக்குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது. (க)

## வீரமரணம்

### மீனா

சிறிலங்கா இராணுவத்தினருடன் குப்பிளான் பகுதியில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த பெண் போராளி மீனா (கிளிநொச்சி) என்பவர் நேற்றைய தினம் வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

விளம்பரம்

**டில்கா வாச் வேக்ஸ்**
**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

**ரதிவோச் வேக்ஸ்**

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல 14 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது. என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B/1580)

**பொது அறிவு-பாலர் தமிழ்**

எழுது வினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய பொதுஅறிவ (புதிய பதிப்பு) ரூபா 46/- சீர்திருத்த எழுத்துக்களுடன் வண்ணப் பதிப்பான பாலர் தமிழ் விலை ரூபா 12/- ஆர்ட்பேப்பரில் ரூபா 15/- கிடைக்குமிடம் அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி.

**அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ்**

சீர்திருத்த எழுத்துக்களுடன் அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ் வண்ணப்பதிப்பு (இரண்டாம் பதிப்பு) விற்பனையாகின்றது ரூபா 12/- ஆர்ட் பேப்பரில் ரூபா 15/- மொத்தமாகக் கிடைக்கும் இடங்கள்: பூபால சிங்கம் புத்தகசாலை, மண்டேலா றேடர்ஸ், நல்லூர், அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. (B/1570)

**தவறிவிட்டது**

இராசரெத்தினம் ரவீந்திரன் என்பவருடைய அடையாள அட்டை இல. 621721615V பூநகரி வாடியடிச் சந்திக்கருகில் 9. 11. 90 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழேயுள்ள முகவரிக்கு தயவு செய்து தபால் மூலம் அனுப்பவும். இ. ரவீந்திரன் 852/5, பருத்தித்துறைறோட், நல்லூர், யாழ்ப்பாணம் (R. 827)


## ஐந்து மாதங்களாகச் சம்பளமில்லை

திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நில அளவைத் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

இதனால் அங்கு கடமையாற்றி வரும் மூன்று திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்களும் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர். (24)

# ராமஜென்மபூமி - மசூதி பிரச்சினை; இருசாராரும் ஏற்கக் கூடிய தீர்வு - சந்திரசேகர்

(டில்லி)

ராம ஜென்ம பூமி-பாபர் மசூதி பிரச்சினைக்கு இருதரப்பாரும் ஏற்கக் கூடிய வகையில் தீர்வு காண வேண்டும் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றும், இந்த விடயத்தில் மக்கள் எதிர்ப்புக் கொள்கை, பகைமைப் போக்கினைவிட்டு சமூகமான தீர்வு காண ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்தப் பிரச்சினை குறித்து தான் இருதரப்பாருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் குறிப்பிட்டஅவர், இந்த விஷயத்தில் காட்டப்படும் எந்த வகையான எதிர்ப்புக் கொள்கையும் நாட்டிற்கு நாசகரமான விளைவையே கொண்டு வரும் எனவும் கண்டித்தார்.

இதேவேளை நீதிமன்றத் தீர்ப்பும் அனைவருக்கும் ஏற்கக் கூடியதாக அமைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசால் மூடப்பட்ட

## டாக்கா பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் நடைபெறுகின்றன

(டாக்கா)

பங்களாதேஷில் டாக்கா பல்கலைக் கழகம் காலவரையறையற்று மூடப்பட்டு இருந்தாலும், அங்கு விரிவுரையாளர்களால் வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களாக மாணவர்கள் நடத்திவரும் ஆர்ப்பாட்டம் குறித்து பங்களாதேஷ் அரசாங்கம் டாக்காவில் உள்ள பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலைகளை காலவரையறையற்றுமூடியது.

மேலும் டாக்கா பல்கலைக் கழகத்திற்குள் அத்துமீறிச் சென்ற ராணுவம் மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் தாக்கியது.

இதன் பின்னர் விரிவுரையாளர்களும், மாணவர்களும் பல்கலைக் கழகத்திற்குச்சென்றனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு விரிவுரையாளர்கள் வகுப்புகளை நடத்தினர். விரிவுரையாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து பாடம் நடத்தியதாகவும் சொல்லப்படுகிறது

## மழையினால் தொழில்கள் பாதிப்படைந்துள்ளன

(மாங்குளம்)

முல்லைத்தீவில் பெய்து வரும் கடும்மழையினால் விவசாயம், மீன்பிடி என்பன பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுப் பகுதியில் பெய்த அடைமழையினால் பயிரழிவு பெருமளவு ஏற்பட்டுள்ளது வயல் நிலங்கள் பெருமளவு நீரில் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகளுக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (82)

## வங்கி இயங்குகிறது

(கொழும்புத்துறை)

இலங்கை வங்கியின் ஊர்காவற்துறைக் கிளை கடந்த பகன்கிழமை முகல் யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையின் கட்டிடத்தில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## குறைந்தளவு நிலத்திலேயே வேளாண்மை செய்யப்படுகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இம்முறை மிகக்குறைந்த அளவு நிலப்பரப்பிலேயே வேளாண்மை செய்யப்பட்டுள்ளது எரிபொருள் தட்டுப்பாடு, விலையுயர்வு ஆகிய காரணங்களினாலேயே விவசாயச் செய்கைகளை விவசாயிகள் கூடுதலாகக் கைவிட்டுள்ளனர்.

எருது மாடுகளுக்கும் இங்கு பற்றாக்குறை இருப்பதனால், மாடுகளைக்கொண்டு வயல்களை உழுது விதைக்க முடியாது இருந்து வருகிறது.

இது தவிர வயல்களில் நீர் தேங்கி நிற்பதாலும் விதைக்க முடியாது இருப்பதாகவும் கூறப்படுகிறது.

விதைநெல் தட்டுப்பாடு, பசளை, கிருமிநாசினித் தட்டுப்பாடு ஆகியனவும் கூடுதலாக உள்ளதாலும், இவற்றின் விலைகள் பலமடங்கு கூடியுள்ளதாலும் இந்த முறை விவசாயத்திலீடுபட விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். (49)

# புரட்சிகர சமுதாயத்தை அமைக்க நாம் போராடுகிறோம் - சோபிகா

(புங்குடுதீவு)

''இன்று நாம் ஒரு புரட்சிகர சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆண்டாண்டு காலமாக சிறிலங்கா அரசினால் எமது மக்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றார்கள்; எத்தனையோ மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக பிற நாடுகளில் தஞ்சம் அடைகின்றார்கள்; அவர்களின் இருப்பிடங்கள் அழிக்கப்படுகின்றன. எத்தனையோ பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள், பட்டினியால் எத்தனையோ சாவுகள் நிகழ்கின்றன. தமிழ் மக்கள் இவை போன்ற எத்தனையோ வழிகளில் பல இன்னல்களை அனுபவித்து. வருகின்றார்கள். இத்தகைய கால கட்டத்தில் எமக்கு போராட்டம் மிக மிக அவசியமானதொன்றாகவே உள்ளது'' இவ்வாறு விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவின் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் செல்வி சோபிகா அவர்கள் எட்டாம் திகதி எமது புங்குடுதீவு நிருபருக்கு அளித்த பிரத்தியேக பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

மேற்படி படைப் பிரிவின் புங்குடுதீவுப் பிரதேச [illegible] லகத்தில் வைத்து வழங்கிய இந்தப் பேட்டியில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்: ''ஆண்ட பரம்பரை இன்று அந்நிய தேசங்களில் மட்டுமன்றி சொந்த மண்ணிலும் கூட அகதிகளாக்கப் பட்டு வருகின்றது. காலம் காலமாக சிங்கள ஏகாதிபத்திய அரசினால் ஏமாற்றப் பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையிலேதான் எமது போராட்டம்ஆரம்பமாகியது. தம் உயிரைத் துச்சமென மதித்து எதிரியுடன் போராடி களத்தில் வீரமரணமடையும் எமது போராளிகளின் வீரமும் உயிர்த் தியாகங்களுமே எமது விடுதலைப் போரின் இன்றைய வளர்ச்சிக்கு காரணம் ஆகும்.

மேலும் பெண்களின் உரிமைகளை நிலை நாட்டவும், பெண்ணடிமையை எதிர்த்துப் போரிடும் வீராங்கனைகள் எமது சுதந்திரத்தை மீட்டெடுக்கும் பணியில் பாரிய பங்கினை வழங்கி வருகின்றார்கள். இந்த நிலையில் போராட்டத்தைப் பற்றியும், எம்இனத்தின் விடுதலையைப் பற்றியும் கருத்தில் கொள்ளாது வாழுதல் எம் இனத்திற்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்

சொத்துக்கள் உடமைகள் எத்தனைதான் அழிந்தாலும் எமது விடுதலை உணர்வை மட்டும் அழிய விடாது இறுதி வரை எமது இலட்சியத்தை அடைவதற்காக மக்கள் அனைவரும் போராட்டத்துடன் ஒன்றிணைந்து எமக்கென்றொரு நாட்டை உருவாக்கி நாம் சுதந்திரமாக வாழ வழி வகுக்க வேண்டும்.'' என்றும் செல்வி சோபிகா தெரிவித்தார். (22)


## புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத ஆண்டு ஐப்பசித் திங்கள் 28ஆம் நாள்(14-11-90) புதன்கிழமை பகல் 1. 58 முதல் 2. 13 மணி வரையுமுள்ள கும்பலக்கின சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

**அமிர்தவாசம்**

என்னும் புதுமனையில் குடிபுக பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து புதுமனையை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

''அமிர்த வாசம்''
111, இராச வீதி,
குடியேற்றத்திட்டம்,
திருநெல்வேலி.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்
S. D. இராசையாவும் துணைவியாரும்,
(ஆர். வி. ஜி. பீடி விற்பனைப் பிரதிநிதியும்,
சாவற்காடு கிளை உரிமையாளரும்) (B/1584)



## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

18.10.90 அன்று பலாலி ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த



வீர ஜனனம்: 1972 - 01 - 01

வீர மரணம்: 1990 - 10 - 12

**ராசீக்**
**(சிறி பாலசுப்பிரமணியம் அன்பழகன்)**

பத்துத் தடவை பாடைவராது
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா
செத்துமடிதல் ஒரேயொரு முறைதான்
சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா!

நெல்லண்டை, பருத்தித்துறை

(B-1581)

## சிந்தனைக்கு

நெருப்பு சிறியது என்றால் முந்தானையில் முடியலாமோ ?

— ஜிளன்டன் மாட்டின்


# ஈழநாதம்

81, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 13-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## புத்துயிர்ப்பு...?

இந்தியாவில் ஆட்சி மாற்றம் இடம் பெற்றுள்ளது. புதிய பிரதமராக பாராளுமன்ற மொத்த அங்கத்தவர்கள் தொகையில் ஏறத்தாழ பத்து சதவீதம் அளவில் உறுப்பினரைக் கொண்ட ஜனதாதள சோசலிஸ்ட் கட்சி - சந்திரசேகர் கட்சி - ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது.

இந்த ஆட்சி மாற்றத்தில் பெரும் பங்கு முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியினுடையது என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. இந்தியாவின் ஜனாதிபதியும் இந்திரா காங்கிரஸ் கட்சி தமக்கு வழங்கிய பதவிக்கு நன்றிக் கடன் செலுத்தி விட்டதாகவே கருத இடமுண்டு. ஏனெனில் சந்திரசேகரை ஆட்சி அமைக்க அழைத்தமை இந்திய அரசியல் மரபுகளுக்கு உட்பட்டதல்ல என்பது இந்திய அரசியலமைப்பு சட்ட வல்லுனர்கள் கருத்தாகும்.

எது, எவ்வாறாயினும் இந்தியாவின் இன்றைய பிரதமமந்திரி சந்திரசேகர், இவர் இந்திரா காங்கிரஸ்கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி விரும்பும்வரைதான் பிரதமராக இருக்கலாம்.

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி விரும்பியிருந்தால் இம்முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கலாம். இந்திரா காங்கிரஸிற்கு தனியாக அறுதிப் பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இல்லாவிட்டாலும், தோழமைக் கட்சிகளுடன் ஆட்சியை அமைத்திருக்கலாம். ஆனால் ராஜீவ் அதை விரும்பவில்லை.

இன்று இந்தியாவில் எரியும் பிரச்சினைகளான மண்டல் கமிசன் அமுலாக்கம், ராம ஜென்ம பூமி - பாபர் மசூதிப் பிரச்சினைகள் இந்திரா காங்கிரஸ் கட்சியின் உண்மைச் சொரூபத்தை வெளிக்காட்டி விடும் என்பதை ராஜீவ் உணர்ந்திருந்தமையாலேயே அவர் ஆட்சியை விரும்பவில்லை. இதனால் சந்திரசேகரை ஆட்சியில் அமர்த்தி தாம் விரும்புவதைச் செய்விப்பதோடு, இந்த இரு பிரச்சினைகளையும் வேறு பிரச்சினைகளால் மழுங்கடிக்க எண்ணியுள்ளார் போல் தெரிகின்றது. அதாவது பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளை மண்டல் கமிசன் அமுலாக்கம், ராமஜென்ம பூமி - பாபர் மசூதிப் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளியதைப் போன்று.

இந்தநிலையில், இந்தியாவின் இலங்கை தொடர்பான கொள்கையில் விரைவில் மாற்றம் வரலாம் எனவும் இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் உயிரூட்டப்படலாம் எனவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தலாம் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். அதுவும் இந்தியாவில் எரியும் பிரச்சினைகளான மண்டல் கமிஷன் அமுலாக்கம் தற்பொழுது இந்திராகாங்கிரசின் கோட்டையாக விளங்கும் தென்னிந்தியாவைப் பொறுத்து மக்களாலும் மாநில அரசாங்கங்களினாலும் ஆதரிக்கப்பட்ட பிரச்சினை ஆகும். இதன் காரணத்தினால் இந்தப் பிரச்சினையைத் திசைதிருப்ப அல்லது மழுங்கடிக்க இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தீவிர கவனம் செலுத்தலாம்.

அதேவேளை இந்தியா முன்னர் விட்ட தவறைப் போன்றதொரு தவறை மீண்டும் இலங்கை விவகாரத்தில் விடக்கூடாது என்பதை இலங்கைத் தமிழர் சார்பில் இந்தியாவிற்கு வற்புறுத்திச் சொல்வதோடு, கடந்தகால நிகழ்வுகளையும் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒருபோதும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்த ஒப்பந்தம் தமிழ் மக்கள் மீதான ஒரு திணிப்பாகவே அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது.

தமிழ் மக்கள் என்றும் இந்தியாவை எதிரியாக பார்த்ததில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கையையும், அதைஇ ராணுவத்தின் மூலம் நடைமுறைப்படுத்தமுற்பட்ட போதுமே எதிர்த்தார்கள். இதனால் பலநூற்றாண்டுகளாக அன்னியோன்னியமாக இருந்த உறவில் விரிசல் ஏற்பட்டது.

இன்றைய அரசியற் சூழ்நிலையிலும் இலங்கைத் தமிழர்கள் சார்பில் அதையே திருப்பிச் சொல்கிறோம். இந்தியா எமது உரிமைகளை மதித்துப் போற்றினால் வரலாற்று ரீதியான நட்புத் தொடரும். இதையே இலங்கைத் தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள். அதை விடுத்து இந்தியா திணிப்பு ஒன்றைச் செய்யுமானால் அதற்கு எதிராக போராடுவதைத் தவிர தமிழருக்கு வேறு வழி இல்லாமற் போய்விடும்.

## முல்லைத்தீவு, கிளிநொச்சியில் மாவீரர்தின ஏற்பாடுகள்

(மாங்குளம்)

முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் மாவீரர் தின நினைவாக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் விமானத் தாக்குதலினால் வெறிச்சோடிக் கிடந்த நகர வீதிகள் கலகலப்படைய ஆரம்பித்துள்ளன. சந்திகள் தோறும் அலங்கார வளைவுகள் நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒட்டுசுட்டான் சந்தி, புதுக்குடியிருப்பு சந்தி, மல்லாவிச் சந்தி, வவுனிக்குளம் சந்தி பரந்தன் சந்தி, கிளிநொச்சி கரடிப்போக்கு ஆகிய பகுதிகளில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மக்கள் நடமாட்டமும் நகரப் பகுதிகளில் அதிகரித்துக் காணப்படுகிறது. (82)

## உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



# 12

பதுமன் என்னோடு பேசிக் கொண்டிருக்கையில் அந்தப் பொதுமகன் தெருவால் சென்ற மாட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். முதுகில் "க" என்ற குறியுடன் போகும் அந்த மாட்டில் அப்படி என்னதான் விசேடம் இருக்கும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே "என்னமாட்டையே வெறித்துப் பார்க்கிறீர்கள்' என்றேன். 'மாட்டுக்குக் குறி சுட்டிருக்கிறது. இதேபோலத்தான் மனிதருக்கும் குறிசுட்டார்கள். பழைய ஞாபகம் வந்தது' என்றார். மனிதருக்கா? என்றேன். ஆம், இந்திய இராணுவம் இருக்கும்போது கள்ளிமேட்டில் எமது இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவர் ஈ. பி. ஆர். எல். எப். இடம் பிடிபட்ட போது கையில் எல் ரி. ரி ஈ என்று கம்பியால் காய்ச்சிக் குறி இழுத்தார்கள் என்றார். அப்படி சூடுவாங்கியவரின் பெயர் என்ன? என்றேன். பெயர் நவரட்ணம். குருகுல பூபாலசிங்கம் என்பவரின் மகன் என்றார். கள்ளிமேட்டில் பின்னர் ஊற்றிக்கொழுத்தப்பட்டவரின் பெயரும் நவரட்ணம்தானே என்றேன். அவர்வேறு இவர்வேறு. அவர் அவரது மைத்துனன் (மனைவியின் சகோதரன்) நவீனன் இயக்கத்தில் இருந்ததற்காகக் கொழுத்தப்பட்டவர்என்றார். தொடர்ந்து யாருக்காக இப்படி வெறியாட்டம் ஆடினார்களோ, அவர்களே இன்று.. என்று இழுத்தார். என்ன விடயம் என்றேன். ஈ. பி. ஆர் எல். எப். இன் இராணுவப் பொறுப்பாளராக இருந்த ஜோர்ஜ்தம்பிராசா தவராஜாவின் மனைவி சகுந்தலையையே இராணுவம் கடத்திக் கொண்டு போய்விட்டது. இனி தேடவேண்டிய அவசியம் இருக்காது. முன்பு நேவி கொண்டுபோய் தடுப்புக் காவலில் வைத்திருந்தார்கள் இப்போது அப்படி எதுவும் இல்லாதபடியால் இறந்தவர்களின் பட்டியலில் சேர்க்க வேண்டியதுதான் என்றார்.

"திருமலை நகருக்குள் வேறு என்ன நடந்தது"? என்றேன். சண்டை தொடங்கிய ஒரு வாரமளவில் தனியார் பஸ் வைத்திருக்கும் கணேஷ் என்பவர் தனது மனைவியின் ஊரான நிலாவெளியை விட்டுப் புறப்பட்டார். திருமலையில் அவருக்கு அறிமுகமாயிருந்த வெளிநாட்டவரான ஆறு வெள்ளையர்களுடன் தனது குடும்பத்தைச் சேர்ந்த பதின்னான்கு பேருடன் புறப்பட்டார். வெள்ளைக்காரருடன் புறப்படுவதால் தனக்கு ஏதும் நடக்காது என்ற நம்பிக்கை தான் அவருக்கு இருந்தது. கணேஷ் அவரது மனைவி, அவருக்கு அறிமுகமான பன்னிரண்டு வயதுப் பெண்பிள்ளை, ஒன்றரை வயதுக்குழந்தை ஒன்று, டொலர் ஏஜென்ஸியின் மைத்துனன் பாலு, மகேஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் முதலாளியின் மகன் ஆகியவர்கள் இந்தப் பஸ்ஸில் போனவர்களில் எனக்குத் தெரிந்தவர்கள்.

பஸ் ஹொறவப்பொத்தானை போனபோது அங்கு பொலிசாரால் இடைமறிக்கப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஓ. ஐ. சியாக இருந்தவர் ஒரு சிங்களவர். அவருக்கும் கணேசுக்கும் பழக்கம் இருந்தது. ஆகையால் விசாரணையில் பெரிய சிக்கல் இருக்கவில்லை. டொலர் ஏஜென்ஸியின் மைத்துனன் கொண்டு வந்த 35 இலட்சம் ரூபா காசும் நகையும் தான்பிரச்சினையாக இருந்தது என்றார். "ஏன் இவ்வளவு பணத்தைக் கொண்டு புறப்பட்டார்கள்"? என்றேன். பணம் வங்கியிலிடப்பட வேண்டியது. ஏழு நாட்களாக வங்கியில் பணம் வைப்பிலிடப்படாததால் தான் இவ்வளவு காசு சேரவேண்டி வந்தது. இந்தவிடயங்கள் எல்லாம் ஆவணங்களுடன் சரியாக நிரூபிக்கப்பட்டன. அதற்குப் பிறகு ஓ. ஐ. சி ஒரு கடிதம் கொடுத்திருந்தார் இவர்கள் பயணத்தைத் தொடரதடையில்லை என்று. ஆனால் புறப்பட்ட சிறிது நேரத்தில் பஸ்ஸை இராணுவம் மறித்தது என்றார்.

> மாட்டுக்குக் குறி சுட்டிருக்கிறது. இது போலத்தான் மனிதருக்கும் குறி சுட்டார்கள் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர்.

'அப்படியானால் வெளிநாட்டவர்கள் நிலைமை என்ன மாதிரி?" என்றேன். "அவர்களை சிறிலங்காப் படையினர் வேறு பஸ்ஸில் கொழும்புக்கு அனுப்பி விட்டார்கள்" என்றார். பணத்தையும் நகையையும் கண்ட இராணுவத்தினர் பஸ்ஸை இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர். முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட சிறிது நேரத்தில் ஒரு பெண்ணின் ஓலம் பெரிதாகக் கேட்டது. அப்போது வாகனங்களின் எஞ்சின் இயக்கப்பட்டு அவற்றின் ஓசையால் அந்த ஓலம் மறைக்கப்பட்டது. அன்றிரவு அந்த முகாமில் தீ மூட்டப்பட்டு வெளிச்சம் எரிந்தது. இப்போது பஸ் சாலியபுர முகாமில் உள்ளது என்றார். பஸ்ஸின் இலக்கம் தெரியுமா? என்றேன். 29ஸ்ரீ...இலக்கம் சரியாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள சேவ்ரி நிறுவனத்தில் இருந்து வாங்கிய பஸ்தான் அது என்றார்.

பின்பு என்ன நடந்தது என்றேன். டொலர் முதலாளி ஒரு வழக்கறிஞருடன் இராணுவ முகாமுக்குச் சென்றார். ஆனால் ஜே. வி. பி. தான் பஸ்ஸை மறித்தது என்று கேள்விப்பட்டோம். எமக்கு இதைப்பற்றி முழு விபரமும் கிடைக்கவில்லை என்று அனுப்பி விட்டனர் என்றார். இந்த விபரம் எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்? பஸ்ஸில் போன அனைவரும் தான் முடிந்து விட்டார்களே என்றேன். ஹொறவப் பொத்தானையில் ரொட்டவெவாவைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் இருந்தார். அவரை மௌலவிஎன்று அழைப்போம், அவர் மூலம் தான் இந்தத் தகவல் வெளிவந்தது. அதற்குப் பிறகுதான் டொலர் முதலாளி இராணுவ முகாமுக்குச் சென்று விசாரித்தார் என்றார். தொடர்ந்துவாகனத்தில் பிரயாணம் செய்வது என்பது இனி நினைத்துப் பார்க்க முடியாத விஷயம். என்றார்.

(இதன் பின்னர் இ. போ. ச. பஸ்ஸில் வீரகேசரி நிருபர் வேலாயுதத்தின் மகள் லலிதா பணம், நகை போன்றவற்றுடன் திருமலையிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டனர் என்றும், 92 ஆம் கட்டையில் முஸ்லிம் ஊர்காவல் படையினரும், சிங்கள ஊர்காவல் படையினரும் அவர்களின் பணம், நகை போன்றவற்றைப் பறித்துவிட்டு அவர்களை வெட்டுவதற்காக இழுத்தபோது சிங்களவரான இ. போ. ச. சாரதி ஆட்களை விடாவிட்டால் பஸ்ஸை எடுக்கமாட்டேன் என்று மிரட்டியதாகவும் அதனால் லலிதாவும் குடும்பத்தினரும் தப்பினார்கள் என்றும் அறிந்தோம்.)

எப்படியாவது நடந்து போகமுடியாதா? என்று கேட்டேன். அப்போது பதுமன் குறுக்கிட்டு அது மிகவும் சிரமம். நாங்கள் நடந்துவந்த பாதையின் கஷ்டம் உங்களுக்குத் தெரியும்தானே. தனி ஆட்களென்றால் பரவாயில்லை. ஒருநாள் கைக்குழந்தையுடன் ஒரு குடும்பம் வந்தது. அந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தது. குடும்பத் தலைவனுக்கு என்னை விட வயது குறைவுதான். எங்களை கண்டதும் "அண்ணே எனது பிள்ளைக்கு ஏதாவது கொடுங்கள். நாங்கள் சாப்பிடா விட்டாலும் பரவாயில்லை. பசியால் குழந்தை கத்துகிறது. என்னால் இந்த நிலையைத் தாங்கமுடியாது" என்றுஎனது காலில் விழுந்து அழுதான். அவர்களைப் பார்க்க வேதனையாக இருந்தது. முகாமில் நோயாளிகளுக்கென வைத்திருந்த பால்மாவை எடுத்துக் கரைத்து குழந்தைக்கு கொடுத்து விட்டு, அவர்களுக்கும் உணவும் மற்றும் தேவையானவையும் கொடுத்து அனுப்பி வைத்தோம். அன்றைய காட்சியை நினைத்தால்... என்று கண்கலங்கினார் பதுமன். அப்போது "மட்டக்களப்புக்குச் செல்ல ஆயத்தம்" என்றார்கள்.

(தொடரும்)

## மாவீரர்தின நடவடிக்கைகள்

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் மாவீரர் தினத்தையொட்டி பல சிரமதானப் பணிகளையும், கலை, கலாசார நிகழ்ச்சிகளையும் நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன் தமிழீழ மண்மீட்புப்போர் வீரர்களின் ஞாபகார்த்தமாக அங்குள்ள ஆறு வீதிகளுக்கு அவர்களின் பெயர்கள் சூட்டப்பட உள்ளதாகவும் நிலையப் பொருளாளர் திரு. கி. நடராசா தெரிவித்துள்ளார். (24)

# எவ். ஏ. ஓ. நிறுவன உதவியுடன் கிளிநொச்சியில் மண் ஆய்வுகூடம்

(கிளிநொச்சி)

ஐக்கிய நாடுகள் உணவு விவசாய ஸ்தாபனத்தின் (எவ்.ஏ.ஓ) உதவியுடன் கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மண் ஆய்வுகூடம் ஒன்று நிறுவப்பட உள்ளது.

சுமார் ஐம்பது லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட இருக்கும் இந்த ஆய்வுகூடத்திற்கான ஆரம்ப திட்டமிடல் வேலைகள் தற்பொழுது நிறைவடைந்துள்ளன இதன் அடுத்தகட்ட வேலைகளை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மேற்கொள்வதற்கு மேற்படி ஸ்தாபனம் உறுதி அளித்துள்ளதாக கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய பிரதிப் பணிப்பாளர் டாக்டர் திரு.விவேகானந்தன் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகூடம் எல்லா வகை மண் சம்பந்தப்பட்ட சகல பாிசோதனைகளையும் மேற்கொள்ளக்கூடிய வசதிகளைக் கொண்டிருக்கும்.

இதுவரை காலமும் மண்பரிசோதனைகளை நடாத்துவதற்கு பேராதனை விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கே மண்மாதிரிகள் அனுப்பப்பட்டு பரிசோதனை முடிவுகளுக்காகப் பலமாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. இதனால் வடபகுதியில் விவசாய நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தன. (க)

## திட்டக் கமிஷன் உறுப்பினர்கள் பல பேர் இராஜினாமா

(டெல்ஹி)

இந்தியாவில் மத்திய திட்டக் கமிஷன் உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்துள்ளார்கள். பதவி வழி காரணமாக நியமனம் பெற்ற ஒரே ஒருவரைத் தவிர, மற்ற எல்லோரும் பதவி விலகி உள்ளார்கள்.

புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய உதவும் வகையில் தாம் பதவி விலகி உள்ளதாக உறுப்பினர்கள் அறிவித்துள்ளார்கள். பதவி விலகியவர்களில் ஒருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த வைத்தியநாதன்.

## பொதுக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட அனைத்து மாணவர்களுக்குமான பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை மு. ப. 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டுரையாற்றவுள்ளனர் கூட்டத்திற்கான ஒழுங்குகளை மறுமலர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. (மு)

**தனியார் கல்வி நிறுவனங்கள்**

## பாடசாலைக் கல்விக்கு சவாலாக இருந்ததில்லை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக் கல்விக்குத் தனியார் கல்வி நிறுவனங்கள் சவாலாக ஒருபோதும் இருந்தது இல்லை. இவ்வாறுநேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற அமரர் திரு கிருஷ்ணானந்தன் நினைவுப்பேருரை நிகழ்த்திய விரிவுரையாளர் திரு நித்தியானந்தன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் பாடசாலைக் கல்வி முறையை மாற்றிவிடக்கூடிய சக்தி தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இல்லாத நிலையில்கூட தேசிய மட்டமுறை சார்ந்தமுறைபில் இருந்த பல்வேறு குறைபாடுகளை அமரர் திரு. கிருஷ்ணானந்தன் தனியார் கல்வி நிறுவனங்கள் ஊடாக நிவர்த்தி செய்து தமிழ் மாணவர்களின கல்வி வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றியவர் என்று கூறினார்.

நினைவுப்பேருரையில் கல்வி வளர்ச்சியைப் பல புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தார்.

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. இராஜன் பேசுகையில்;

திரு கிருஷ்ணானந்தனின் கற்பித்தல் முறை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வளர்க்க உதவியது என்றார். அவர் தொடர்ந்து பேசுகையில் தற்போதைய கல்வித் திட்டம் எமது மண்ணின் தேவைக்கேற்பவும், போராட்டச் சூழலுக்கேற்பவும் மாற்றப்படவேண்டும். இந்த அடிப்படையிலேயே அமரர் கிருஷ்ணானந்தனின் கல்விப் பணி இருந்தது என்று கூறினார்.

இவ்வைபவத்தில் பல அறிஞர்கள், மாணவர்கள் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

திரு. கிருஷ்ணானந்தனின் நினைவாக ''பொருளிதழ்'' என்ற சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டது. (க)

**அநீதி----**

விற்கு நேன் முறையீடு செய்யும் படி கேட்கப்பட்டிருக்கிறார்கள். முறையீட்டின் பிரதிகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பணிமனையில் கையளிக்கும்படியும் அதன் செயலாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் 2, 3 ஆம் தர அதிபர்கள் பதவி உயர்வுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் காலக் கெடுவை நீடிக்கும் படியும் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்விச் சேவை ஆணைக் குழுவை கோரவுள்ளது. மேற்படி பதவி உயர்வுக்கான விண்ணப்பங்களை சங்கத்தின் பணிமனையில் நாளை மறுநாள் முதல் பெற்றுக் கொள்ளலாம்.

**சிலாவத்----**

வத்தினர் பெரும் இழப்புகளுடன் பின்வாங்கி முகாமினுள் முடங்கினர். சேதவிபரங்கள் தெரியவில்லை. (மு)

**சாகாமம்----**

தலையும், துப்பாக்கிப்பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல்களால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்ட காயப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை தெரியவில்லை. (மு)

**உணவு**

வழங்குவதற்கான அங்கீகாரம் இக் கூட்டத்தில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (லோ)


## அடக்க ஆராதனை

### பாஸ்டர் ஏ. ஜோன்

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று 13-11-90 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு இலங்கை பெந்தெகொஸ்தே சபை சுண்டிக்குளி விசுவாச வீட்டில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொழும்பிலுள்ள எமது தலைமை ஸ்தலத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதைச் சபையாருக்கு அறியத் தருகிறோம்.

தகவல்;

சகோதரன் A. மகேந்திரன்

இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி,
சுண்டிக்குளி.

(R/828)



**சமூகத்-----**

எமது சமூகத்தில் ஒருகூட்டு மனப்பான்மையை இந்தக் கல்வி வளர்க்கவில்லை. பொது நல நோக்காக எமது கல்வி அமைந்திருக்க வேண்டும். ஆனால் முழுவதும் சுயநல நோக்கத்தின அடிப்படையிலேயே இந்தக் கல்விமுறை அமைந்திருக்கிறது. இதனாலேயே நாம் எமது அறிவைக் கொண்டு உழைப்பவர்களாக உள்ளோம் என்றார்.

மேலும் அவர் தமிழ் மொழியின் பெருமை பற்றி எடுத்துக் கூறும்போது உலகில் ஒரு சில மொழிகளைத் தவிர அனைத்து மொழிகளுக்கும் முன் தமிழ்மொழியில் இலக்கண வடிவமைத்து காப்பியங்கள் வகுக்கப்பட்டுள்ளன. உலகிலேயே எத்தனையோ மொழிகள் உருவாகுமுன் தோன்றிய உயர்ந்த இனம் தமிழ் இனம், மூத்த இனம் தமிழ் இனம் என்ற இந்த உணர்வுடன் ஒவ்வொரு மாணவர்களும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

எம்மத்தியில் போராட்டத்தால் கல்வியை இழந்துவிட்டோம் என்ற ஒரு கருத்து உள்ளது. நாம் கல்விக்கு ஆதரவற்றவர்களும் அல்ல, அதற்கு முரண்பட்டவர்களும் அல்ல. வவுனியா மாவட்டம்போன்ற இடங்களில் கல்விவளர்ச்சியை நோக்கமாகக்கொண்டு பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான முன் முயற்சிகள் பலவற்றை எடுத்துள்ளோம். யாழ் குடாநாட்டில் இப்பொழுது பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது குறித்து மிகவும் கவனம் செலுத்துகிறோம். போராட்டத்துடன் இணைந்த கல்வியை இன்று எம்மத்தியில் உள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பெற்று வருகின்றனர்.

ஒரு சாதாரண மாணவன் பத்துதொடக்கம் பதினைந்து வருடங்களில் பெற்றுக் கொள்ள முடியாத கல்வியை எமது இயக்கத்தில் உள்ள ஒரு போராளி ஒரு வருடத்திலே கற்றுக் கொள்கிறான். உலகிலே இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட அதிநவீன கம்பியூட்டர்களாக இருந்தாலும் சரி, ஒரு வீடியோ கமராவாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு அதிநவீன அதி சக்திவாய்ந்த சுடுகலனாக இருந்தாலும் சரி எம்முடன் உள்ள போராளிக்கு




## தமிழர் ஆசிரியர் சங்க புதிய பணிமனை புதன் திறப்பு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய தலைமைப் பணிமனை நாளை புதன்கிழமை காலை 10 மணி முதல் நல்லூரில் இலக்கம் 442, பருத்தித்துறை வீதியில் உள்ள கட்டடத்தில் செயற்படத் தொடங்கும். காலை 10.15 மணியளவில் யாழ். மாவட்டத்திலுள்ள சங்கத்தின் தாய்ச் சங்க, மாவட்ட சங்க, கிளைச் சங்க நிர்வாகிகள் கூட்டம் ஒன்று நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தினால் ஏற்படவுள்ள விளைவுகள், அதிபர் பதவியிலுள்ளவர்கள் பற்றிய முறையீடுகள், மற்றும் முக்கியமான விடயங்கள் தொடர்பாகவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்

**ராஜீவ்**

அவர்களுக்குப் பயிற்சி அளித்தார் என்பதையும் முழு உலகமும் அறியும். தீவிரவாதிகள் அவருக்கு அடிபணிய முன்வராததாலேயே அவர்களுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினார்.

இதேவேளை மிக அண்மையில் தான் திரு. ராஜீவ் கலந்துகொண்ட வைபவம் ஒன்றில் செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியிருந்தார் என்பதையும் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி சுட்டிக் காட்டியுள்ளார்.

அவற்றைக் கையாளும்விதம் நன்குதெரியும். உலகிலேயே மிகச்சிறந்த தொலைத்தொடர்பு சாதனங்களை எமது போராளிகள் கையாளுகின்றார்கள். இலங்கையிலேயே இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட அதிநவீன வீடியோக் கமராக்கள் நான்கு மட்டுமே உண்டு என்றால் அவற்றில் மூன்று எமது போராளிகள் வைத்திருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல் எமது போராளிகளின் தொழில்நுட்ப அறிவைப்பற்றி நாம் எடுத்துக் கூறத்தேவையில்லை. ஒரு ஜொனி மிதிவெடியாக இருந்தாலும்சரி, அருள் 89ரக துப்பாக்கியில் பொருத்தப்படும் எறிகணையாக இருந்தாலும் சரி பசீலன் 2000 ரக பாரிய எறிகணையாகஇருந்தாலும்சரி இவையனைத்தும் எமது உள்ளூரிலேயே சாதாரண போராளிகளால் உருவாக்கப்பட்டவையே என்று கூறினார்.

ஆகவே எமது மண்ணிற்காக எமது மக்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் பயன்படக்கூடியவகையில் எமக்கென்றொருகல்வித் திட்டம் அமைக்கப்படவேண்டும். தற்போது எமது மண்ணில் தமிழீழ ஆய்வு நிறுவனம் என்ற ஒரு ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டு பல ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றது. இத்தகைய ஆய்வுகள் போல ஒவ்வொரு மாணவர்களும் இந்த மண்ணின் விடுதலைக்காகவோ பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்காகவோ ஆய்வுகளைச்செய்து ஒவ்வொரு புதிய பொருள்களை, கலன்களை கண்டுபிடியுங்கள். உங்கள் ஆற்றலை தமிழீழத்தில் பகிர்ந்துகொள்ளுங்கள் உங்கள் கண்டுபிடிப்புகளை இந்த மண்ணிற்குத் தாருங்கள் என்று யோகி கூடியிருந்த மாணவர்களிடம் வேண்டியதுடன் இறுதியாக உணர்ச்சி பொங்க மாணவர்களை உங்கள் செயற்பாடுகள் யாவும்ஆயுதப்போராளிகளின் துன்ப துயரங்களுடன் அவர்களுடையமனநிலையுடன்சேர்ந்து நிற்குமாறும் வேண்டிக் கொண்டார். (லோ)

**கிருஷ்ணானந்தன்**

ஈடுபட வைப்பதற்காகவே என்றும் இத்திட்டம் பற்றிய மேலதிக விபரங்கள் வெகுவிரைவில் அறிவிக்கப்படும் என்றும் கிருஷ்ணானந்தன் நினைவுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

**தாமதம்**

ஆணையாளர் ஊடாக அரச நன்கொடையிலிருந்தோ அல்லது வேறு ஏதாவது வழிகளிலோ பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இது கிடைக்கும் பட்சத்தில் அப்பகுதிகளுக்கு மின்சாரத்தினை வழங்கக்கூடியதாக இருக்குமெனவும் மானிப்பாய் கிராம மின் அத்தியட்சகர் ஆறுமுகம் தெரிவிக்கிறார் (ச)

**நெல்லியடியில்**

கவியரங்கு, பட்டி மன்றம், நடனங்கள், வில்லுப் பாட்டு, நாடகங்கள், போன்ற அனைத்து நிகழ்ச்சிகளும் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமுகமாக நிலைய மாணவர்களினால் புதிய ஆக்கங்களாக மேடையேற்றப்படுகிறது; விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்களும் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவார்கள்.

**போராட்டச்**

மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி மாலினி உரையாற்றுகையில் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் எமது எதிர்காலத்தை சுபீட்சமாக அமைத்துக் கொள்ள வேண்டும்என்பதற்காகஇந்தப் போராட்டம் ஆரம்பமாகியது. மாணவர்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கையை மேம்படுத்துவதைக்காட்டிலும் தமிழினத்தின் முன்னேற்றம் என்ற குறிக்கோளைஅடிப்படையாக கொண்டு கல்வியைத் தொடர்வதே போராட்டத்தில் பங்கு பற்றுவதாக அமையும். ஒவ்வொரு மாணவர்களுக்கும் விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றும் கடமை உண்டு. இதில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு முக்கியத்துவமானது. தாயக விடுதலைப் போராட்டத்தை எவ்வாறு திட்டமிட்டு நடாத்துவது என்பது குறித்து தீர்மானிப்பதில் முக்கியபங்கு வகிப்பவர்கள் அவர்களே என்றும் கூறினார். (லோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.